செ.வெ. எண். 568 நாள். 07.07.2010.

**அருந்ததியர் இனத்தவர் சாதிச் சான்றினை பதிவு செய்து கொள்ள வேண்டுகோள்.**

அரசாணை (நிலை) எண். 50, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள். **29.04.2009–ல்** ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்ட **18%** இட ஒதுக்கீட்டிற்குள் அருந்ததியர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளுக்கென **3%** உள் ஒதுக்கீடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் அவர்களால் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை மற்றும் மதுரை ஆகிய அலுவலகங்களுக்கு கணினியில் SCA என்று பிரித்து மென்பொருள் தயார் செய்து அனைத்து அலுவலகங்களிலும் SCA என்ற மென்பொருள் கணினியில் நிறுவப்பட்டது. மேலும், அருந்ததியினத்தவர்களை தங்கள் சாதிச் சான்றிதழ்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக தினசரி நாளிதழ்களில் ஆகஸ்ட் **2009** முதல் வாரத்தில் விளம்பரம் அளிக்கப்பட்டு ஆகஸ்ட் **2009** இரண்டு மற்றும் மூன்றாம் வாரங்களில் பதிவுதாரர்கள் கொண்டு வந்த சான்றிதழ்களை கணினியில் உட்செலுத்தப்பட்டது. தற்போது ஆசிரியர் தேர்வு வாரியத்தால் உடற் பயிற்சி ஆசிரியருக்கான பணியிடங்களை நிரப்பிட பட்டியல் கோரி அறிவிப்பு பெறப்பட்டு அதற்கான பட்டியல்கள் **32** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்தும் பெறப்பட்டு பதிவு மூப்பின் அடிப்படையில் ஒருங்கிணைத்து பட்டியல் அனுப்பப்படவுள்ளது. இதேபோன்று ஆசிரியர் தேர்வு வாரியம், இதர வேலையளிப்போர்கள் அறிவித்துள்ள அருந்ததியினருக்கான பணிக்காலியிடங்களுக்கும் பட்டியல் அனுப்பப்பட உள்ளது. எனவே, அருந்ததியர் இனத்தவர்கள் அனைவரும் தங்களுடைய சாதிச் சான்றிதழை வருவாய் வட்டாட்சியர்களிடமிருந்து பெற்று, வேலைவாய்ப்பு பதிவு அடையாள அட்டையுடன் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நேரிடையாக சென்றோ, தபால் மூலமாகவோ அருந்ததியர் என வகைப்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு பதிவு செய்துக் கொள்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, அருந்ததியர் இனத்தவர் **31.07.2010–க்குள்** தவறாமல் பதிவு செய்யவோ, பதிவை சரிபார்க்கவோ முன் வர வேண்டும். எதிர்காலத்தில் ஏற்படும் காலியிடங்களையும், பின்னடைவுப் பணியிடங்களையும் முழுமையாக நிரப்பிட ஏதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது என வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திரு. ஆ.சு. ஜீவரத்தினம்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

7/7/10

**ஆணையர்**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,**
**கிண்டி, சென்னை.600 032**

7/7/2010